செய்தி ஆறு

# தேவனுடைய பொருளாட்சியின்படியான பிரபஞ்சமளாவிய வரலாறு—ஒரே புதிய மனிதனை நிஜத்தில் பெறுவதற்கான கர்த்தருடைய இருதய வாஞ்சையை நிறைவேற்ற மனித வரலாற்றினுள் உள்ள தெய்வீக வரலாறு

வேத வாசிப்பு: யோவே. 1:4; 3:11; எபே. 1:3-6; 2:15; 4:22-24; மீகா. 5:2; வெளி. 19:7-9

**I. இந்தப் பிரபஞ்சத்தில் இரண்டு வரலாறுகள் உள்ளன: மனிதனின் வரலாறு, அதாவது மனித வரலாறு மற்றும் தேவனின் வரலாறு, அதாவது தெய்வீக வரலாறு; முந்தையது புறம்பான ஓடு போன்றது, பிந்தையது ஓட்டுக்குள் உள்ள பருப்பு போன்றது—ஒப். யோவே. 1:4:**

A. மனித வரலாற்றினுள் உள்ள தெய்வீக வரலாறும் கணிசமான அளவுக்கு விவரமாக வேதத்தில் வெளிப்படுத்தப்படுகிறது; தேவன் நம்முடன் சேர்க்கையில் இருப்பதால் அவருடைய வரலாறு நம் வரலாறாகும்:

1. தேவனுடைய நகர்வு மனிதனுடன் சேர்க்கையில் இருப்பதற்கான ஓர் ஆயத்தமாகக் கடந்த நித்தியத்திலுள்ள தேவனின் வரலாற்றை நாம் பார்க்க வேண்டும்:

a. தெய்வீக வரலாறு நித்திய தேவனோடும், அவரது பொருளாட்சியுடனும் ஆரம்பித்தது; தம் பொருளாட்சியின்படி, மனிதனுடன் ஒன்றாக இருக்கவும், அவனது ஜீவன், ஜீவ-நிரப்பீடு, மற்றும் எல்லாமுமாக இருக்கவும், அவனைத் தம் வெளியாக்கமாகக் கொண்டிருக்கவும் அவனுக்குள் தம்மையே அடித்துருவாக்க தேவன் விரும்புகிறார்—எபே. 3:10-11; 1:9; ஆதி. 1:26; 2:9.

b. தேவனுடைய நித்தியப் பொருளாட்சியை நிறைவேற்றுவதற்காகக் கிறிஸ்துவின் அதிமுக்கியமான மரணம் குறித்த ஒரு தீர்மானத்தை எடுக்க நித்தியத்தில் தேவன் தம் தெய்வீகத் திரியேகத்துவத்தில் ஓர் ஆலோசனைக்கூட்டத்தை நடத்தினார்—அப். 2:23.

c. தெய்வீகத் திரியேகத்துவத்தின் இரண்டாவது நபர், பெத்லகேமில் ஒரு மனிதனாகப் பிறப்பதற்கு, நித்தியத்திலிருந்து காலத்திற்குள் செல்லும் தமது “புறப்படுதல்களை” நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்தார்—மீகா 5:2.

d. தேவன் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவில் விசுவாசிகளை உன்னதங்களிலே ஆவிக்குரிய ஆசீர்வாதங்களால் ஆசீர்வதித்தார்—எபே. 1:3-6.

2. மனிதனில் தேவனின் வரலாறு மாம்சமாகுதலுடன் தொடங்கி, மனித வாழ்க்கை, சிலுவைமரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் ஆகிய அவரது வழிமுறைகளுடன் தொடர்ந்தது; இவை அன்பின் கயிறுகள், மனிதனின் வடங்கள் என்று ஓசியா 11:4 கூறுகின்றது.

a. மனிதனில் தேவனுடைய நகர்வாகிய தெய்வீக வரலாறு, தேவனுடைய நித்தியப் பொருளாட்சியின் உச்சநிலை நிறைவேற்றமாக, மாபெரும் தேவ-மனிதனாக, புதிய எருசலேமில் முழுநிறைவடையும் புதிய மனிதனுக்கென்று, மூலமுன்மாதிரியாகிய தேவமனிதனான பதனிடப்பட்ட கிறிஸ்துவுடன் இருக்கிறது.

b. கிறிஸ்துவின் மாம்சமாகுதல் மற்றும் மனித வாழ்க்கையின் மூலம், அவர் வரம்பற்ற தேவனை வரம்புள்ள மனிதனுக்குள் கொண்டுவந்தார், அவர் மூவொரு தேவனை முப்பகுதி மனிதனுடன் சேர்த்திணைத்து, கலந்திணைத்து, தம் மனுஷீகத்தில் தம் நறுமணமிக்க நற்பண்புகள்மூலம் உதாரத்துவமான தேவனை அவரது ஐசுவரியமான குணாம்சங்களில் வெளிக்காட்டினார்.

c. கிறிஸ்துவின் சிலுவைமரணம் ஒரு பதிலீடான மரணமாக, ஒரு சகலத்தையும் உள்ளடக்கிய மரணமாக, பழைய சிருஷ்டிப்பைத் தீர்த்துக்கட்டி, எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்த ஒரு சகலத்தையும் உள்ளடக்கிய சட்டரீதியான மீட்பாக இருந்தது (யோவா. 1:29); தம் சிலுவைமரணத்தில் அவர், தேவனால் சிருஷ்டிக்கப்பட்டுப் பாவத்தில் வீழ்ந்துபோன எல்லாவற்றையும் மீட்டார் (எபி. 2:9; கொலோ. 1:20), தம் தெய்வீக மூலக்கூறினால் புதிய மனிதனைச் சிருஷ்டித்தார் (கருத்தரித்தார்) (எபே. 2:15), தம் மனுஷீக ஓட்டிற்குள்ளிருந்து தம் தெய்வீக ஜீவனை விடுவித்தார் (யோவா. 12:24; 19:34; லூக். 12:49-50).

d. தம் உயிர்த்தெழுதலில் அவர், தேவனின் முதற்பேறான குமாரனாகப் பிறந்தார் (அப். 13:33; ரோ. 1:5; 8:29), ஜீவன்-தரும் ஆவியானார் (1 கொரி. 15:45), ஆயிரக்கணக்கான

மக்களைக் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அவயவங்களாகவும், சபையாகிய ஒரே புதிய மனிதனின் ஆக்கக்கூறுகளாகவும் தேவனுடைய குமாரர்களாக இருக்க மறுபடிஜெநிப்பித்தார் (1 பேது. 1:4; கொலோ. 3:10-11).

e. அவர் பரலோகங்களுக்குப் பரமேறினார், அதன்பின்னர் மூவொரு தேவனின் கூட்டு வெளியாக்கத்திற்காக ஒரே புதிய மனிதனாக, சபையை உற்பத்திசெய்ய ஆவியானவராக இறங்கிவந்தார்—யோவே. 2:28-32; அப். 2:1-4, 16-21.

B. ஆகவே, ஒரே புதிய மனிதனின் நிஜமாகிய சபையும், புறம்பான மனித வரலாற்றினுள் உள்ள தெய்வீகப் பரமஇரகசியத்தின் உள்ளார்ந்த வரலாறாகிய தெய்வீக வரலாற்றின் ஒரு பகுதியாகும்; தெய்வீக வரலாற்றின் இந்தப் பகுதியின் முடிவில், அந்திக்கிறிஸ்து மற்றும் அவனது சேனையைத் தோற்கடிக்க கிறிஸ்து தம் சேனையாகிய தம் ஜெயங்கொள்பவர்களுடன் திரும்பி வருவார்—யோவே. 1:4; 3:11.

C. இதைத் தொடர்ந்து, ஆயிர வருட இராஜ்யம் வரும்; இறுதியில், இந்த இராஜ்யம் புதிய வானம் புதிய பூமியில் உள்ள புதிய எருசலேமில் முழுநிறைவடையும்; புதிய எருசலேமே தேவனுடைய வரலாற்றின் உச்சநிலையான, முழுநிறைவான படியாக இருக்கும்.

**II. (மீன்பிடி ஊழியமாகிய) பேதுரு, (கட்டுமான ஊழியமாகிய) பவுல், (பழுதுபார்க்கும் ஊழியமாகிய) யோவான் ஆகியோர்மூலம், ஒரே புதிய மனிதனைப் பெறுவதற்கான கர்த்தருடைய இருதய வாஞ்சையை நாம் பார்க்க முடியும்:**

A. பல யூத விசுவாசிகளை உள்ளே கொண்டுவருவதற்கு பெந்தெகொஸ்தே நாளில் தேவன் பேதுருவைப் பயன்படுத்தினார் (அப். 2:5-11); கொர்நேலியு ஜெபத்தில் ஒரு தரிசனத்தைப் பெற்றான் (10:30), பேதுருவும் ஜெபத்தில் ஒரு தரிசனத்தைப் பெற்றான் (வவ. 17, 19) இவற்றின் மூலம் ஒரே புதிய மனிதன் நடைமுறையில் இருப்பதற்காகப் புறவினத்தாரை ஆதாயம்செய்வதற்கான தேவனுடைய திட்டமும், நகர்வும் நிறைவேற்றப்பட்டன (வவ. 9-14, 27-29).

B. கிறிஸ்துவானவர் தம் புதிய-மனிதனை-சிருஷ்டிக்கும் மரணத்தின்மூலம் (ஒப். எபே. 4:22-24) யூதர்கள் புறவினத்தார் ஆகிய இருவரையும் ஒரே புதிய மனிதனாகச் சிருஷ்டித்தார் என்று எபேசியர் 2:14-15இல் பவுல் திரைநீக்குகிறான்; நாம் "யூதராயினும் கிரேக்கராயினும்" எல்லாரும் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டிருக்கிறோம் என்று 1 கொரிந்தியர் 12:13இல் பவுல் நமக்குச் சொல்கிறான்; கிறிஸ்துவுக்குள்ளாக, ஞானஸ்நானம் பண்ணப்பட்டவர்கள் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டனர், அங்கே “யூதனோ கிரேக்கனோ இருக்க முடியாது” என்று கலாத்தியர் 3:27-28இல் பவுல் நமக்குச் சொல்கிறான்; யூதனுக்கும் கிரேக்கனுக்கும் புதிய மனிதனில் இடமில்லை என்று கொலோசெயர் 3:10-11இல் பவுல் நமக்குச் சொல்கிறான்.

C. கர்த்தர் தம் இரத்தத்தால், “சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் தேசங்களிலுமிருந்து” மனிதர்களை விலைக்கு வாங்கினார் என்று யோவான் நமக்குச் சொல்கிறான் (வெளி. 5:9); மீட்கப்பட்ட இவர்கள் இந்த ஒரே புதிய மனிதனாகிய சபையைக் கட்டியமைக்கிறார்கள்; இந்தச் சபைகள் பொன் விளக்குத்தண்டுகளாக இருக்கின்றன என்றும் (1:11-12) முழுநிறைவேற்றமாக, இந்த விளக்குத்தண்டுகள் புதிய எருசலேமாக ஆகின்றன என்றும் யோவான்மூலம் நாம் பார்க்கிறோம்; விளக்குத்தண்டுகளிலும், புதிய எருசலேமிலும் வெவ்வேறு மக்கள் மத்தியில் எந்த வித்தியாசங்களையும் நம்மால் பார்க்க முடியாது.

D. இவை அனைத்தும், நிஜத்தில் ஒரே புதிய மனிதனைப் பெறுவதற்கான கர்த்தருடைய இருதய வாஞ்சையை நிறைவேற்றுவதற்காக (எபே. 4:22-24), நம் நடைமுறைக்குரிய அனுதின வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் நாம் நம் மனதின் ஆவியில் புதுப்பிக்கப்படுமாறு, ஒரே ஆவியானவரைப் பருகுவதன் மூலம் (1 கொரி. 12:13) தினமும் நாம் பழைய மனிதனைக் களைந்துபோட்டு, புதிய மனிதனைத் தரித்துக்கொள்ளவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

**III. தெய்வீக வரலாற்றின்மூலம் ஒரு புதிய சிருஷ்டிப்பு உள்ளது, அதாவது, ஒரு புதிய இருதயத்தையும், ஒரு புதிய ஆவியையும், ஒரு புதிய ஜீவனையும், ஒரு புதிய சுபாவத்தையும், ஒரு புதிய வரலாற்றையும், ஒரு புதிய முழுநிறைவேற்றத்தையும்கொண்ட ஒரு புதிய மனிதன் இருக்கிறான்—பாடல்கள், #16; எசே. 36:26; 2 கொரி. 3:16; மத். 5:8; தீத்து 3:5:**

A. மனிதனில் தேவனின் வரலாறான தெய்வீக வரலாறு, கிறிஸ்துவின் மாம்சமாகுதலில் தொடங்கி, அவரது பரமேறுதல்மூலம், அவர் ஜீவன் தரும் ஆவியானவராக ஆகும் வரையிலும் வந்து, பின்னர் நம்மை ஒரே புதிய மனிதனின் முழு நிஜத்திற்குள் கொண்டுவந்து, கிறிஸ்துவின் மகிமையான மணவாட்டியாக ஆக்க, மறுபடிஜெநிப்பித்தல், பரிசுத்தமாக்குதல், புதிதாக்குதல், மறுசாயலாக்குதல், ஒத்தசாயலாக்குதல், மகிமைப்படுத்துதல் என்ற தேவனின் ஜீவாதார இரட்சிப்பினூடாக அவர் நம்மில் உள்வசிப்பதுடன் தொடர்கிறது—எபே. 4:22-24; ரோ. 5:10; வெளி. 19:7-9.

B. இப்போது நாம் இந்தக் கேள்வியை நமக்கே கேட்டுக்கொள்ள வேண்டும்: நாம் தெய்வீக வரலாற்றில் வாழ்கிறோமா, அல்லது வெறும் மனித வரலாற்றில் வாழ்கிறோமா?

1. நாம் அனைவரும் மனித வரலாற்றில் பிறந்தோம், ஆனால் நாம் தெய்வீக வரலாற்றில் மறுபடிபிறந்து, மறுபடிஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம்; நம் வாழ்க்கை இந்த உலகத்தில் இருந்தால், நாம் மனித வரலாற்றில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்; ஆனால் நாம் ஒரே புதிய மனிதனின் நிஜமாகிய, சபையில் வாழ்ந்துகொண்டிருந்தால், நாம் தெய்வீக வரலாற்றில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்; சபை வாழ்க்கையில் தேவனின் வரலாறு நம் வரலாறாகும்; இப்போது இரு சாரார்களுக்கும்—அதாவது, தேவனுக்கும், நமக்கும்—ஒரே வரலாறு, தெய்வீக வரலாறு இருக்கிறது.

2. நாம் கர்த்தருடைய ஜெயங்கொள்ளும் மணவாட்டியாக இருக்க, நிஜத்தில் ஒரே புதிய மனிதனாக ஆகுமாறு, நம் ஜீவாதார இரட்சிப்புக்காகவும், குடியேற்றமுள்ள முழுப் பூமிக்கும் சமாதானத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதன்மூலம் கர்த்தருடைய பரவுதலுக்காகவும் (எபே. 2:14-17; 6:15; ஒப். மத். 24:14) பரம்புதிரான, தெய்வீகக் காரியங்களை அனுபவமாக்கி, அனுபவித்துமகிழ்ந்து, தெய்வீக வரலாற்றில் இருக்கிறோம் என்பதற்காக நாம் கர்த்தரைத் துதிக்கிறோம்.

© 2020 Living Stream Ministry